இந்திய அரசு
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
6, கல்லூரி சாலை, சென்னை – 600006
தொலைபேசி : 044- 28271951

GOVERNMENT OF INDIA
INDIA METEOROLOGICAL DEPARTMENT
**Regional Meteorological Centre**
**New No. 6, College Road, Chennai–600 006**
**Phone: 044- 28271951**

# வானிலை தகவல்

**நாள்: 22.08.2021** **நேரம்: 1215 மணி**

**தமிழ்நாடு கடற்கரை மற்றும் இலங்கையை ஒட்டி நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாட்டில்**

**22.08.2021:** **திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, மதுரை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும்,** புதுச்சேரி மற்றும் சென்னை மாவட்டங்களில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழையும் பெய்யக்கூடும்.

**23.08.2021:** **டெல்டா மாவட்டங்கள், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்கள் மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும்,** ஏனைய மாவட்டங்களில் அனேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

**24.08.2021:** **சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், சேலம், திருப்பத்தூர், திருவண்ணாமலை, மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும்,** ஏனைய வட மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், தென் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களிலும், இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்

**25.08.2021:** கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்

**26.08.2021:** கடலோர மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய உள் மாவட்டங்கள், மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

**சென்னையை பொறுத்தவரை**

**அடுத்த 24 மணி நேரத்திற்கு** பிற்பகலில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 36 மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும்.

**அடுத்த 48 மணி நேரத்திற்கு** பிற்பகலில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 35 மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும்.

**கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்ச மழை அளவு (சென்டிமீட்டரில்);**

**ரெட் ஹில்ஸ் (திருவள்ளூர்), ரசித்திவந்தியம் (கள்ளக்குறிச்சி) தலா 9, சென்னை நுங்கம்பாக்கம், மதுக்கூர் (தஞ்சாவூர்) தலா 7, வேப்பூர் (கடலூர்), நாங்குநேரி (திருநெல்வேலி) தலா 6, செஞ்சி (விழுப்புரம்), தம்மம்பட்டி (சேலம்), அவிநாசி (திருப்பூர்), திருச்செங்கோடு (நாமக்கல்), சோழவரம் (திருவள்ளூர்), பெரம்பலூர் தலா 5, அம்பத்தூர் (திருவள்ளூர்), வேப்பந்தட்டை (பெரம்பலூர்), சூளகிரி (கிருஷ்ணகிரி), கூடலூர் (தேனி), பலவிடுதி (கரூர்) தலா 4, விருதுநகர், சோலையாறு (கோவை), கொடைக்கானல் தலா 3.**

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:**

**அரபிக்கடல் பகுதிகள்:**

**22.08.2021 முதல் 24.08.2021 வரை:** தென் மேற்கு மற்றும் மத்திய மேற்கு அரபிக்கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்திலும் இடைஇடையே 60 கிலோமீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

**25.08.2021,26.08.2021:** தென் மேற்கு மற்றும் மத்திய மேற்கு அரபிக்கடல், வடக்கு அரபிக்கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்திலும் இடைஇடையே 60 கிலோமீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

**மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

மேலும் விவரங்களுக்கு: imdchennai.gov.in இணையதளத்தை காணவும்.

முனைவர் நா. புவியரசன்
இயக்குனர்
சென்னை வானிலை ஆய்வு மையம்.

# 01.06.2021 முதல் 22.08.2021 வரை பெய்த மழை அளவு

| மாவட்டம் | பதிவான மழை (மி.மீ) | இயல்பு மழை (மி.மீ) | வேறுபாடு (%) |
|---|---|---|---|
| அரியலூர் | 271.9 | 197.3 | 38 |
| செங்கல்பட்டு | 229.1 | 277.7 | -17 |
| சென்னை | 315.0 | 286.9 | 10 |
| கோயம்புத்தூர் | 740.8 | 526.8 | 41 |
| கடலூர் | 259.5 | 189.2 | 37 |
| தர்மபுரி | 244.2 | 193.5 | 26 |
| திண்டுக்கல் | 188.0 | 145.6 | 29 |
| ஈரோடு | 158.4 | 132.2 | 20 |
| கள்ளக்குறிச்சி | 280.1 | 212.7 | 32 |
| காஞ்சிபுரம் | 312.4 | 286.7 | 9 |
| கன்னியாகுமரி | 228.1 | 352.4 | -35 |
| காரைக்கால் | 157.8 | 160.7 | -2 |
| கரூர் | 127.2 | 75.3 | 69 |
| கிருஷ்ணகிரி | 211.3 | 175.5 | 20 |
| மதுரை | 243.4 | 165.3 | 47 |
| மயிலாடுதுறை | 207.2 | 156.7 | 32 |
| நாகப்பட்டினம் | 181.8 | 133.5 | 36 |
| நாமக்கல் | 224.1 | 167.6 | 34 |
| நீலகிரி | 845.3 | 649.4 | 30 |
| பெரம்பலூர் | 333.9 | 127.8 | 161 |
| புதுச்சேரி | 268.5 | 218.2 | 23 |
| புதுக்கோட்டை | 170.1 | 173.7 | -2 |
| ராமநாதபுரம் | 65.5 | 65.6 | 0 |
| ராணிப்பேட்டை | 319.1 | 275.6 | 16 |
| சேலம் | 314.7 | 223.5 | 41 |
| சிவகங்கை | 165.0 | 171.0 | -4 |
| தென்காசி | 106.1 | 123.5 | -14 |
| தஞ்சாவூர் | 218.4 | 159.9 | 37 |
| தேனி | 240.7 | 113.8 | 112 |
| திருநெல்வேலி | 77.4 | 52.4 | 48 |
| திருப்பத்தூர் | 328.4 | 226.9 | 45 |
| திருப்பூர் | 90.7 | 66.0 | 37 |
| திருவள்ளூர் | 394.3 | 278.6 | 42 |
| திருவண்ணாமலை | 312.1 | 246.5 | 27 |
| திருவாரூர் | 157.5 | 155.0 | 2 |
| தூத்துக்குடி | 53.1 | 26.7 | 99 |
| திருச்சிராப்பள்ளி | 223.6 | 121.7 | 84 |
| வேலூர் | 339.8 | 276.1 | 23 |
| விழுப்புரம் | 360.5 | 214.2 | 68 |
| விருதுநகர் | 98.3 | 85.3 | 15 |